செ.வெ.எண்.68 நாள்.21.01.2011

**எவ்வித விபத்தின்மூலம் இறந்தாலும் நிவாரணத் தொகை ரூ.1 லட்சம் – பதிவு செய்த நாளிலிருந்தே நல திட்ட உதவிகள்– அமைச்சர் திரு தா.மோ. அன்பரசன் தகவல்.**

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழு கூட்டம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு தா.மோ. அன்பரசன் அவர்கள் தலைமையில் இன்று 21.1.2011 சென்னை, தேனாம்பேட்டை, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியக் கருத்தரங்குக் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் "கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் பணியின்போது இறந்தால் மட்டுமே விபத்து உதவித் தொகை ரூ.1 லட்சம் கிடைக்கின்ற நிலையை மாற்றி இவர்கள் எவ்வித விபத்தின்மூலம் இறந்தாலும் அந்தக் குடும்பத்திற்கு நிவாரணத் தொகை ரூ.1 லட்சம் வழங்கப்படும் என்றும் கட்டுமானம் மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து 60 வயது பூர்த்தியடைந்தால் எவ்வித நிபந்தனையும் இன்றி ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள், பதிவு செய்த நாளிலிருந்தே வழங்கப்படும் என்றும் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களை அரசு மற்றும் அரசுசார்ந்த பொதுத் துறை நிறுவனப் பணிகளில் ஈடுபடுத்த உரிய அரசாணை பிறப்பிக்கப்படும்" என மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தில் அறிவிப்புகள் வெளியிட்டதைத் தொடர்ந்து நலத் திட்டங்களில் உரிய திருத்தங்கள் மேற்கொள்வதற்கு ஏதுவாக அரசுக்கு பிரேரணை அனுப்ப குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத் திட்டங்களில் தொழிலாளர்கள் பயன்பெறத் தக்கவகையில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளவும் இவ்வாலோசனைக் குழுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை முதன்மைச் செயலாளர், டாக்டர்.டி. பிரபாகர ராவ், இ.ஆ.ப., முதன்மைச் செயலர்/ தொழிலாளர் ஆணையர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., நிதித் துறை இணைச் செயலர் திரு.வெ. பூமாலை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு. பி. கருப்பசாமி, கூடுதல் தொழிலாளர் ஆணையர் (சமரசம்) திரு.சி. தங்கவேலு, ஆகியோர் பங்கேற்றனர். மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே.சுந்தர், திரு டி.மகேஷ் கிருஷ்ணசாமி, திரு.ஏ. சின்னசாமி ஆகியோரும், வேலையளிப்போர் தரப்பு பிரதிநிதிகளாக திரு டி.எம்.ஜவஹர்லால் திரு சி.பாலசுப்பிரமணியன் மற்றும் தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகளாக திரு ஆர்.ஆதிகேசவன் (ஐ.என்.டி.யு.சி), திரு கே.பழனிவேலு (சி.ஐ.டி.யு), திரு டி.ஆர்.எஸ்.மணி (ஏ.ஐ.டி.யு.சி) மற்றும் திரு ஆர். ராமன் (பாட்டாளி தொழிற் சங்கம்) ஆகியோரும் கலந்து கொண்டனர்.

.......

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9